www.padippakam.com



# களம் பல கண்ட யாழ் கோட்டை

## பகுதி: மூன்று

## ஆங்கிலேயர் ஆட்சி


தேவாலயத்திலிருந்த மிகப் பெரிய மணி ஒன்றை வூர்பெண்டல் கொன் சிஸ்ரரி அன்பளிப்பாக ஆங்கிலேயரிடமிருந்து வாங்கி, அதனை சென் மைக்கேல் சேர்ச்சிற்கு ரூபா இருநூறுக்கு விற்றுவிட்டது. இருபதாம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் புதிதாக உருவாக்கப்பட்ட தொல் பொருள் ஆய்வுத் திணைக்களம், இத் தேவாலயத்தைப் பாதுகாக்கப்பட்ட தொல் கட்டிடம் எனப் பிரகடனப்படுத்திக்கொண்டது. எனினும், யாழ்ப்பாணத்திலிருந்து புரட்டஸ்தாந்து சமயத்தினரின் மூன்று பிரிவினர், அரசாங்கத்தின் அனுமதியுடன் ஆண்டில் மூன்று நாட்கள் இத் தேவாலயத்தில் வழிபாடு இயற்றி வந்தனர் எனத் தெரிய வருகிறது.

ஆரம்பத்தில் ராணிமாளிகை இரு மாடிக்கட்டிடமாக இருந்தது. பின்னரே ஒரு தளக்கட்டிடமாக ராணி மாளிகை அமைக்கப்பட்டது. பிரித்தானியர் ஆட்சிக்காலத்தில் கோட்டைக்குள்ளிருந்த 'ராணி மாளிகை' சுப்ரீம் கோர்ட் நீதிபதிகளினதும், அரசாங்க அமைச்சரிகளினதும் பருவ தங்குமிடமாக விளங்கியது. யாழ்ப்பாணத்திற்கு வருகை தருகின்ற உயரதிகாரிகளும் ராணி மாளிகையில் தங்கிச் சென்றனர். ராணி மாளிகையில் விக்டோரியா மகாராணியின் முழு அளவிலான ஓவியப்படம் மாட்டப்பட்டிருந்தது.

கொழும்பிலிருந்து யாழ்ப்பாணத்திற்கு வரும் சுப்ரீம் கோர்ட் நீதிபதிகள் ராணி மாளிகையில் தங்கத் தொடங்கினர், அவர்களால் விசாரிக்கப்பட்டு மரண தண்டனை பெற்ற குற்றவாளிகள் யாழ்ப்பாணக் கோட்டையின் தூக்குமேடையில் தூக்கிலிடப்பட்டனர். அதற்கென யாழ்ப்பாணக் கோட்டையின் கிழக்குப் பகுதியில் உயர்பீடக் கொத்தளத்தில் தூக்குமாட்டும் கோபுரம் அமைக்கப்பட்டது. நான்கு தூண்களும் கூரையும்கொண்ட அக்கோபுரத்தின் உச்சியில் பிணைக்கப்பட்ட வளையத்திலிருந்து தூக்குக்கயிறு தொங்கும். கீழே கால்கள் நிற்குமிடத்தில் தட்டுப்பலகை இடப்பட்டிருந்தது. தூக்கில் மாட்டுகின்ற தண்டனைகளை ஆங்கிலேயர் காலத்தில் "அலுகோசுகள்" எனப்பட்டவர்களே செய்தார்கள். ஒல்லாந்தர் காலத்தில் அலுகோசுகளாக இருந்தவர்கள் ஆபிரிக்கக் காப்பிலியர்களாவர். ஆங்கிலேயர் காலத்தில் அவ்வேலைகளைச் செய்வதற்கு நன்கு குடித்துச் சுய அறிவை இழக்கும் சுதேசிகள் நியமிக்கப்பட்டிருந்தனர். இந்தத் தூக்கு மண்டபத்தை முற்றவெளியில் நின்று பார்க்கலாம். மக்கள் குழுமி நின்று பார்க்கத்தக்கதாகவே குற்றவாளிகளுக்கான தூக்குத் தண்டனையை அலுகோசுகள் நிறைவேற்றினர். நீதிபதிகளினால் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டவர்கள் கோட்டையின் சிறைச்சாலையில் அடைக்கப்பட்டனர்.

ஒல்லாந்தரின் படைவீரர்கள் தங்கிய பாசறை வீடுகளை ஆங்கிலேயர் சிறைச்சாலைக்கான கட்டிடங்களாக மாற்றியமைத்தனர். அவற்றின் வலதுபக்கச் சுவரில் 'கடவுளே அதியுயர் நீதிபதி' (God is the Supreme judhe) என்ற வாக்கியங்களைப் பொறித்தனர்.

கோட்டையின் ஆங்கிலேயக் கமாண்டர் காற்றுவாங்குவதற்காகக் கோட்டைக்கு வெளியே உலா வருவான். ஒற்றைக் குதிரை பூட்டிய 'றிக்சோ' போன்ற கோச் வண்டியிலேறிப் பவனி வருவான். அவன் பின்னால் கொடி தாங்கிய சிங்களவர்கள் சிலர் வர, அவன் வண்டியின் முன்னால் மேளங்களை இதமாக முழக்கியவாறு தமிழர்கள் சிலர் நடப்பார்கள். கோச் வண்டியின் இருபுறமும் துப்பாக்கி ஏந்தி குதிரை வீரர்கள் வருவார்கள். படாடோபமாகவும் வெகு அமர்க்களமாகவும் கோட்டையின் கமாண்டர் வாழ்ந்தான்.



யாழ்க் கோட்டைக்குள் அமைந்திருந்த ஒல்லாந்தரின் தேவாலயம் (ஹெய்ட் என்பவரின் வரைபு – 1744)

### 29 ஜூன் 1887

யாழ்ப்பாணக் கோட்டை வெகு உற்சாகமாக விளங்கியது. கோட்டை நன்கு அலங்கரிக்கப்பட்டிருந்தது. கோட்டையைச் சுற்றியுள்ள முற்றவெளியில் அன்று பிற்பகல் மக்கள் நிரம்பி வழிந்தனர். கோட்டை முனியப்பர் கோயிலுக்குச் சமீபமாக இடப்பட்டிருந்த பாரிய அலங்காரப் பந்தரிலே அரசாங்க ஏசண்டர் துவனம், தனது பரிவாரங்களுடன் அமர்ந்திருந்தார்.

ஆம், அன்று பிரித்தானிய மகாராணி விக்டோரியாவின் ஐம்பதாவது வருட மகுடோற்சவக் கொண்டாட்டத்தை கொண்டாடிக்கொண்டிருந்தார்கள். அன்றிரவு ஏழரை மணிக்கு வாண வேடிக்கை நிகழவிருந்தது. இங்கிலாந்திலிருந்தும் கொழும்பிலிருந்தும் கொண்டு வரப்பட்ட வாணங்கள் (பட்டாசுகள்) வேடிக்கை காட்டவிருந்தன. முற்றவெளி கொள்ளாதபடி சனத்திரள் குவிந்து நின்றது.

வாணவிளையாட்டு ஆரம்பமானது. பந்தரில் பலவகை வாணங்கள் குவிந்திருந்தன. வாண்ங்கள் வெடித்தன. ஆகாயத்தை கீறிக்கொண்டு கிளம்பிப் பூப்பூவாகச் சிந்தின. திடீரென சீமை வாணமொன்று வழிதவறி அலங்காரப் பந்தரின் வாணக் குவியலுட் புகுந்தது. பீரங்கியென வெடித்தது. அருகில் நின்றவர் பலியாகினர். எங்கும் கூச்சல். மக்கள் திக்குத் திசை தெரியாது பாய்ந்தோடினார்கள். கூச்சல், கூக்குரல் முற்றவெளியெங்கும் நிறைந்தது. பொலிஸ் அதிகாரி றட்துரைக்கு அருகில் நின்றிருந்த சார்ஜன் சுப்பையா மகனும் கடுங்காயமுற்று விழுந்தார். அரசாங்க ஏசண்டர் துவைனமும் பொலிஸ் அதிகாரி றட்டும் வேகமாகப் பாதுகாப்புத் தேடி ஓடிப்போய் திரும்பி வந்தபோது, நூற்றுக்கணக்கானோர் காயமடைந்திருந்தனர். அவர்கள் உடனடியாக வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டனர்.

1897-ம் ஆண்டு அதேயிடத்தில் விக்டோரியா மகாராணியின் அறுபதாவது ஆட்சி நிறைவு (வச்சிரயூபிலி) கொண்டாடப்பட்டது. ஆனால், அவ்வேளை வடமாகாண அரசாங்க ஏசண்டாகவிருந்த ஹோர்ஸ்பறோ வாணவேடிக்கைக்கு அனுமதியளிக்கவில்லை.

1940-ம் ஆண்டு வரை அரண் சுவர்களில் பொருத்தப்பட்டிருந்த பீரங்கிகள் நீக்கப்பட்டிருந்தன. பின்னர் அவை அவ்விடங்களிலுருந்து அகற்றப்பட்டன. அகற்றப்பட்ட பீரங்கிகளும், பீரங்கிக் குண்டுகளும் காலகதியில் உருக்கப்பட்டன.

### 04 பெப்ரவரி 1948

ஆங்கிலேயரின் கொடி இலங்கை எங்கனும் இறக்கப்பட்டது. அவ்விடத்தில் சிறீலங்காவின் ஆதிக்கக்கொடி உயர்த்தப்பட்டது. தெளிவாகப் பிரிந்திருந்த தமிழரசையும், சிங்கள அரசையும் ஒன்றாக்கி பேரினவாதிகளின் கைகளில் தூக்கி வழங்கிவிட்டு, ஆங்கிலேயர் விருப்பின்றி விலகிச் சென்றனர்.

⊙ ⊙ ⊙

# நீலவண்ணன்

## பகுதி: நான்கு

## ஈழ யுத்தம் - 1

I

### 04 பெப்ரவரி 1948.

இலங்கையைச் சுதந்திர நாடாகப் பயன்படுத்திய ஆங்கிலேயர், சிங்களப் பேரினவாதிகளிடம் கையளித்துவிட்டு அகன்றனர். அன்றிலிருந்து தமிழ் மக்களுக்கு எதிரான அடக்குமுறைகள் அவிழ்த்துவிடப்பட்டன.



யாழ்ப்பாண முற்றவெளியிலிருந்து நோக்கும்போது யாழ்ப்பாணக் கோட்டையின் தோற்றம். (ஹெய்ட் என்பவரின் வரைபு – 1744)

1948-ம் ஆண்டில் இந்திய வம்சாவழித் தமிழரின் பிரசாவுரிமை பறிக்கப்பட்டது. 1949-ல் அகில இலங்கைக் காங்கிரசிலிருந்து விலகிய, எஸ். ஜே. வி. செல்வநாயகம் சமஷ்டிக் கட்சியைத் தொடங்கினார். 1951-ல் ஐக்கிய தேசியக் கட்சியிலிருந்து விலகிய எஸ்.டபிள்யூ.ஆ.டி. பண்டாரநாயக்கா லங்கா சுதந்திரக் கட்சியை ஆட்சியைக் கைப்பற்றும் நோக்குடன் ஆரம்பித்தார். 1952-ல் பிரதமர் டி.எஸ்.சேனனாயக்கா இறக்க, டட்லி.சேனனாயக்கா பிரதமர் ஆனார். 1953இல் டட்லி சேனனாயக்கா அரசியல் நெருக்கடி காரணமாகத் தனது பதவியை ராஜினாமாச் செய்ய, சேர்.ஜோன் கொத்தலாவல பிரதமரானார். அவர் பிரதமரான அடுத்த வருடமே (1954) யாழ்ப்பாணத்திற்கு நல்லெண்ண வருகை தந்தார். கொக்குவிலில் நிகழ்ந்த கூட்டத்தில் "சிங்களமும், தமிழும் அரச மொழிகளாகும். தமிழுக்கு சம அந்தஸ்து" என்று வாக்குறுதி அளித்தார்.

யாழ்ப்பாணக் கோட்டை இவற்றை எல்லாம் பார்த்துக் கொண்டிருந்தது. அவ்வேளை யாழ்ப்பாணக் கோட்டைக்குள் பொலிசாரின் விடுதிகளும் சிறைச்சாலையும் இயங்கி வந்தன. அரச அதிகாரிகள் வந்து தங்கும் மாளிகையாக "குயின்ஸ் ஹவுஸ்" விளங்கியது. வேறெவ்வித முக்கிய நிகழ்ச்சிகளுக்கும் யாழ்ப்பாணக்கோட்டை ஆட்படவில்லை.

சேர்.ஜோன் கொத்தலாவலவின் வாக்குறுதிக்கு மாறாக, S.W.R.D. பண்டாரநாயக்க 'சிங்களம் மட்டும்' என்ற இனவாதக் கொள்கையை ஆட்சியைக் கைப்பற்றும் துரும்பாகப் பிடித்துக்கொண்டார். சேர். ஜோன். கொத்தலாவல கொக்குவில் வாக்குறுதியைக் கைகழுவியும், பண்டாரநாயக்காவை ஆட்சிக்கு வராது தடுத்துவிட முடியவில்லை. 1956இல் பண்டாரநாயக்க பிரதமமந்திரியாகப் பதவி ஏற்று இருபத்துநான்கு மணி நேரத்துள் 'சிங்களம் மட்டும்' சட்டத்தை காலிமுகத்திடலில் சத்தியாக்கிரகம் செய்த தமிழரின் இரத்தத்தின் சாட்சியத்தில் நிறைவேற்றினார். அதன் பயனாக தமிழருக்கு எதிரான வகுப்புவாதக் கலவரம் கட்டவிழ்த்து விடப்பட்டது.

1957இல் 'பண்டாரநாயக்க-செல்வநாயகம்' ஒப்பந்தம் கைச்சாத்தானது. அதனை எதிர்த்து ஜே.ஆர்.ஜயவர்த்தன கண்டிக்குப் பாதயாத்திரை நடத்தினார். அதேவேளை பண்டாரநாயக்க ஆட்சியில் சுகாதார அமைச்சராக இருந்த விமலா வியவர்த்தன, பௌத்த பிக்குகளோடு பிரதமரின் இல்லத்திற்கு ஊர்வலம் சென்று, அந்த ஒப்பந்தத்தை கிழித்தெறிய வைத்தார். 1958இல் இலங்கையில் முன் எப்போதும் இல்லாத விதமாகத் தமிழருக்கு எதிரான வகுப்புவாதக் கலவரம் வெடித்தது. எல்லாமாகச் சேர்த்து திரண்டு 1959-ல் பண்டாரநாயக்க தான் இயக்கிய வன்முறைக்கலாச்சாரத்திற்கே பலியாகினார். பிரதமர் தனது இல்லத்தில் வைத்து பிக்கு ஒருவனால் சுடப்பட்டு இறந்தார். 1960-ல் இலங்கையின் முதலாவது விதவைப் பிரதமராக ஸ்ரீமாவோ பண்டாரநாயக்க ஆட்சியிலேறினார்.

(தொடரும்)

படிப்பகம்